

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், குமரன்குடி பரளியாற்றில் குறுக்கே ரூ.200 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் அணைக்கரை, அருவிக்கரை இணைப்புப் பாலப்பணிகளை இன்று (05.07.2016) பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி டி.கெட்சிலிமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 419/2016 நாள்: 05.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப அவர்கள், திருவட்டார் மற்றும் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை இன்று (05.07.2016) ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப அவர்கள் திருவட்டார் மற்றும் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சித்திட்ட முகமை மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை (05.07.2016) ஆய்வு செய்தார்.

2014-2015 ஒப்படைக்கப்பட்ட மானிய வருவாய் திட்டத்தின்கீழ், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், குமரன்குடி பரளியாற்றில் குறுக்கே ரூ.200 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் அணைக்கரை, அருவிக்கரை இணைப்புப் பாலப்பணிகளையும், 2015-2016 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், கொல்லஞ்சியில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரிக்கும் பணியினை பார்வையிட்டு, உரக்குழிகளை ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், (2014-2015) நட்டாலம் வாழைத்தோட்டத்தில் ரூ. 14.55 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் கிராம ஊராட்சி சேவை மையக் கட்டிட பணிகளையும், 2015-2016 திப்பிரமலையில் ரூ.17 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் கிராம ஊராட்சி சேவை மையக் கட்டிட பணிகளையும், நட்டாலத்தில் ரூ. 2 இலட்சம் செலவில் மரக்கன்றுகள் நட்டும் பணியினையும் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்சிலீமா அமலினி, செயற்பொறியாளர் பொறி. எஸ். ஏழிசைசெல்வி, உதவி செயற்பொறியாளர் பொறி. எம்.எஸ்.சங்கர், உதவி பொறியாளர்கள் பொறி. பி.கார்த்திகேயன், சிதம்பரதாணுபிள்ளை, இளநிலை பொறியாளர் பொறி. கெமில்டன் ஹர்டா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. எஸ்.ஆர்.கே.குமார், திரு. சசிகுமார், திரு. யே. வர்க்கீஸ், திருமதி. உமாராணி ஆகியோர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.